## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 10/2020**

2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ம் தேதி செவ்வாய் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அல்லேலுயா மேரி | தொழில் | : இல்லத்தரசி |
| கணவர் பெயர் | : குழந்தை யேசு | சமயம் | : |
| கிராமம் | : கொம்மேடு | சாதி | : |
| வட்டம் | : | வயது | : 63 |

சாட்சியையும் எதிரியும் அனந்தபுரம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. திரு. E. ஜெயசங்கர் H.C - 1931 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் கொம்மேடு கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 குழந்தை யேசு எனது கணவர். ஆஜர் எதிரி எங்கள் நிலத்திற்கு பக்கத்து நிலத்துக்காரர்.

2. கடந்த 10.09.2018 ம் தேதி மதியம் 1 மணியளவில் கழனியில் ஆஜர் எதிரி எனது கணவரை கல்லால் அடித்துவிட்டார். கல்லாலும், கையாலும் அடித்து குத்தி விட்டார். காலால் எட்டி உதைத்தார். பக்கத்தில் இருந்த என்னை கல்லால் அடித்தார். பிறகு தடி எடுத்து வந்து எனது காலில் அடித்துவிட்டார். பக்கத்தில் இருந்த ஜார்ஜ், சத்தியநாதன் ஆகிய இருவரும் வந்து மறித்துவிட்டார்கள். எங்களை அடித்த ஆஜர் எதிரி அங்கிருந்து ஓடிவிட்டார். ஜோஸ்மின், வியாகுலமேரி ஆகியோர்கள் எங்களை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். காயம்பட்ட எனக்கு செஞ்சி அரசு மருத்துவமனையில் தலையில் 7 தையல்கள் போட்டார்கள். காயம்பட்ட என் கணவருக்கு தலையில் 6 தையல்கள் போட்டார்கள். இங்கு முடியாது என்று சொல்லி மேல்சிகிச்சைக்கு முண்டியம்பாக்கம் மருத்துவமனைக்கு போக சொன்னார்கள். விழுப்புரம் முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் 1 வாரம் பெட்டில் இருந்தோம். பிறகு செஞ்சி மருத்தவமனைக்கு வந்து சென்றோம். செஞ்சி மருத்துவமனையில் ஜிப்மர் மருத்தவமனைக்குபோக சொன்னதால் என் கணவர் மட்டும் ஜிப்மர் மருத்துவமனைக்கு சென்று 2 நாள் சிகிச்சை எடுத்தார். பிறகு மீண்டும் செஞ்சி மருத்துவமனையில் 1 வாரம் சென்று என் கணவர்

சிகிச்சை எடுத்து கொண்டு வந்தார். என் கணவரை போலிசார் விசாரித்தார்கள். என்னை விசாரிக்காமல் பார்த்து விட்டு சென்றார்கள்.

**குறுக்குவிசாரணை**:

3. ஆஜர் எதிரி எனக்கு உறவினரா என்றால் பங்காளி முறையில் சொந்தம். எனது நிலத்தில் ஒரு பைப்பை எதிரி போட்டிருந்தார் என்றாலும், எதிரி நிலத்தில் நாங்கள் ஒரு பைப் போட்டிருந்தோம் என்றாலும் சரிதான். பின்னிட்டு நாங்கள் போட்ட பைப்பை நாங்கள் நோண்டி எடுத்து கொண்டோம். எங்கள் நிலத்தில் மண் மேடு அடித்தபோது எதிரி போட்ட பைப் உடைந்துவிட்டது.

4. 20 வருடத்திற்கு முன்பாக நான் கூறிய பைப்புகள் போடப்பட்டது என்றால் அது தெரியாது. நிலத்து பிரச்சனையில் எதிரி போட்டிருந்த பைப்பை நாங்கள் அகற்றினோம் என்றால் உடைந்துவிட்டது. அதனால் தான் அடித்துவிட்டார்கள். நாங்கள் போட்ட பைப் எதிரி நிலத்தில் உள்ளது என்றால் இல்லை. சண்டை லூர்துசாமி நிலத்தில் நடந்ததா என்றால் ஆமாம். எனது நிலத்தில் சண்டை எதுவும் நடக்கவில்லை என்றால் சரிதான். போலிசாரிடம் எனது நிலத்தில் சண்டை நடந்ததாக சொல்லிவிட்டு லூர்துசாமி நிலத்தில் நடந்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. டாக்டரிடம் கல்லால் அடித்ததாக நான் சொல்லவில்லை என்றால் சொன்னேன். டாக்டரிடம் கத்தி, தடி, கையால் அடித்ததாக கூறிவிட்டு பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் எதிரியை அடித்ததாக எங்களுக்கு எதிராக எதிரி புகார் கொடுத்தாரா என்றால் அது பற்றி தெரியாது. போலிசாரிடம் ஒரு மாதிரி சொல்லிவிட்டு அதற்குமுரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் 4 PVC பைப் சேதமடைந்ததற்கு நஷ்டஈடு கேட்டதற்கு பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை**: இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.